# கல்லறைக்கு அல்ல கலிலேயாவுக்கு

**அவர் இங்கே இல்லை;** தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். (மத் 28:6)
ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, **உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்** என்றார். (மத் 26:32)

ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள் (மத். 28:1). இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த கல்லறை மூன்றுநாள் வரைக்கும் காவல்சேவகர்களால் பத்திரப்படுத்தப்பட்டிருந்தது, முத்திரையிடப்பட்டிருந்தது (மத். 27:64-66). இத்தனையாய் பத்திரப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், **கல்லறையினைத் திறக்காமல் கல்லறையைவிட்டு வெளியே சென்றுவிட்டார் இயேசு கிறிஸ்து**. மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறையினிடத்திற்கு வந்தபோது, "பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்" (மத். 28:2); ஆனால், அவன் கல்லறையைத் திறந்து காட்டினபோது இயேசுவின் சரீரம் இல்லாத **காலியான கல்லறையையே** காட்டுகின்றான். என்றாலும், **இல்லாத இடத்திலேயே இன்னமும் தேடிக்கொண்டிருக்கும் மனிதர்களாக நாம் காணப்படக்கூடாது**.

இயேசுவின் உயிர்த்தெழுதல் லாசருவின் உயிர்த்தெழுதலைப் போன்றது அல்ல. லாசருவை உயிரோடு இயேசு கிறிஸ்து எழுப்பியபோது, **"கல்லை எடுத்துப்போடுங்கள்"** என்று சொன்னார்; மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள்; அதற்குப் பின்பு, **"லாசருவே வெளியே வா"** என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். **அவன் கால்களும் கைகளும் பிரேதச்**

**சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது.** இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார் (யோவான் 11:39,41,43,44). ஆனால், இயேசு கிறிஸ்துவுக்கோ, யாரும் கல்லறையின் கல்லைத் திறக்கவில்லை, அவரது சரீரத்தைச் சுற்றியிருந்த சீலைகளையும், தலையிலே சுற்றியிருந்த சீலையினையும் யாரும் அவிழ்த்துவிடவில்லை. அவரே கட்டுகளை அறுத்தவராக வெளியே வந்தார்.

அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். பேதுருவைப்பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து, அதற்குள்ளே குனிந்துபார்த்து, **சீலைகள் கிடக்கிறதைக்** கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. சீமோன்பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, **சீலைகள் கிடக்கிறதையும்**, அவருடைய **தலையில் சுற்றியிருந்த சீலை** மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான் (யோவா 20:3-7). அதுமாத்திரமல்ல, கல்லறையைக் காவல்காத்துக்கொண்டிருந்த **போர்ச்சேவகர்களின் கண்களுக்குத் தெரியாமலேயே அவர் போய்விட்டார்**. ஆனால், தன்னைத் தேடிக்கொண்டிருந்த மரியாளுக்கும், மகதலேனா மரியாளுக்கும், சீஷர்களுக்கும் அவர் காணப்பட்டார். காவலாளர் தூதனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள்; ஆனால், **ஸ்திரீகளோ தூதனிடத்தில் உயிர்த்தெழுந்த செய்தியை கேட்டுக்கொண்டிருந்தார்கள்**. (மத். 28:4-7)

அதுமாத்திரமல்ல, போகச்சொன்ன **கலிலேயாவுக்குப் (அறுவடைக்குப்) போகாமல் கல்லறைக்கு நேராகப் போய்க்கொண்டிருக்கும் மனிதர்களே இன்றும் மிகுதி**. “நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” (மத் 28:19,20) என்பதே இன்று நமக்கான கட்டளை.